**09.02.2020**

## பத்திரிக்கை செய்தி

## சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் இன்று (09.02.2020) ஓவியப் போட்டிக்கான பரிசு வழங்கும் விழா நடைபெற்றது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை கலைப்பள்ளியுடன் இணைந்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான ஓவியப் போட்டி பிப்ரவரி 2, 2020 அன்று சென்ட்ரல் மெட்ரோ, எழும்பூர் மெட்ரோ, செனாய் நகர், அண்ணா நகர் கோபுரம், கோயம்பேடு, வடபழனி, அசோக் நகர், பரங்கிமலை, விமான நிலையம் மெட்ரோ, சைதாப்பேட்டை மெட்ரோ, தேனாம்பேட்டை, ஆயிரம் விளக்கு, அரசினர் தோட்டம், மண்ணடி, வண்ணாரப்பேட்டை மெட்ரோ ஆகிய 15 மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெற்றது.

“மெட்ரோ இரயில்” அல்லது “மெட்ரோ நிலையம்” அல்லது “மெய்நிகர் உண்மை” என்கின்ற தலைப்புகளில் போட்டிகள் நடத்தப்பட்டது. 15 மெட்ரோ நிலையங்களிலும் பங்கேற்ற மொத்தம் 1,100 பங்கேற்பாளர்களுக்கு பங்கேற்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**பிரிவுகள்:**

- குழு A - 1 முதல் 3 ஆம் வகுப்பு
- குழு B - 4 முதல் 6 ஆம் வகுப்பு
- குழு C - 7 முதல் 9 ஆம் வகுப்பு
- குழு D - 10 முதல் 12 ஆம் வகுப்பு
- குழு E - கல்லூரி மாணவர்கள்

‘‘சிறந்த கலைஞர் விருது -2020’’ தேர்ந்தெடுக்க, ஒவ்வொரு மெட்ரோ நிலையத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 ஓவியங்கள் மெட்ரோ பயணிகள் வாக்களிப்பதற்காக 15 மெட்ரோ நிலையங்களிலும் 03.02.2020 வைக்கப்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் சென்னை கலைப்பள்ளி, பிப்ரவரி 2, 2020 அன்று நடைபெற்ற ஓவியப் போட்டிக்களுக்கான முடிவுகளை அறிவித்துள்ளது இதனைத்தொடர்ந்து, இன்று பிப்ரவரி (09.02.2020) சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடத்தப்பட்ட விழாவில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பொது மேலாளர் திரு. ஆர். முரளி (நிதி) வெற்றியாளர்களுக்கு ரொக்கப்பரிசும், சான்றிதழும் வழங்கினார்.